மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 439, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

439—

செயற்கை வைரம் பட்டை தீட்டும் திட்டம்

***25353—**திரு. சி. குழந்தைவேலு:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் உள்ள சத்தியமங்கலம், வடசேரிப்பட்டி, மேலமூத்தடையின்பட்டி, காவேரி நகர், உப்பிலியகுடி, இரும்பாலி, நார்த்தாமலை, பசுமலைப்பட்டி போன்ற இடங்களில் புதிதாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்கை வைரம் பட்டை தீட்டும் திட்டம் கொண்டுவர அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு** திரு. டி.எம். செல்வகணபதி, **உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில், பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. என்னுடைய குளத்தூர் தொகுதியில் உள்ள சத்தியமங்கலம், வடசேரிப்பட்டி, மேலமூத்தடையின்பட்டி, காவேரிநகர், உப்பிலியகுடி, இரும்பாலி, நார்த்தாமலை, பசுமலைப்பட்டி போன்ற கிராமங்களில் படித்துவிட்டு ஏராளமான பெண்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில், அந்தக் கிராமங்களில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலைக் கொண்டு வந்தால், ஏழையெளிய பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதுடன், அரசுக்கு வருமானம் வரக்கூடிய வாய்ப்பும் ஏற்படும். ஆகவே அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, சுமார் 1½ இலட்சம் பெண்களுக்கு மேலாகப் பயன்பெற்றிருக்கிறார்கள், வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியான குளத்தூரிலேகூட, இன்றைக்கு இந்த செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலின் வாயிலாக சுமார் 77 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், அந்தத் தொகுதியில் மட்டும் 440 நபர்கள் பயன்படுகிற வகையில், பெண்கள் பயன்படுகிற வகையில், 22 செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிற மாவட்டத்திலே மட்டும், புதுக்கோட்டை மாவட்டத்தில், சுமார் 1,464 பெண்கள் பயன்படுகிற வகையிலே 78 மையங்களிலே பட்டை தீட்டும் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே, கடந்த மார்ச் வரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே மட்டும் 440 பேர் பயனடைந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு, அந்தத் தொழில் தொடங்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 440, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

440—

ஒசூரில் சமுதாயக் கூடம் கட்டுதல்

***38975**—திரு. கே. ஏ. மனோகரன் :*

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓசூர் நகரில் இசுலாமிய சமுதாயத்தினர் வசதிக்காக ஒரு சமுதாயக் கூடம் வக்ஃப் வாரியத்தின் மூலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.